நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2019 ஏப்பிறல் 26 | நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் | 2019 இலக்கம் 02

## நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்

2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது

1. ஏற்புடைத்தன்மையும் செயற்பரப்பும்

1.1 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக் கடன்கள் மீது விதிக்கப்படுகின்ற அளவுக்கதிகமான வட்டி வீதத்திலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதமொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

1.2 இப்பணிப்புரையானது, இப்பணிப்புரைத் திகதியிலிருந்து வழங்கப்பட்ட அனைத்து நுண்பாக நிதிக் கடன்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருக்கும்.

2. உயர்ந்தபட்ச வட்டி வீதம்

2.1 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்களுக்கான மற்றைய அனைத்து விதிப்புக்களும் உட்பட ஆண்டொன்றிற்கு 35 சதவீதத்தினை (பயனுறு ஆண்டு வட்டி வீதம்) விஞ்சுகின்ற விதத்தில் வட்டியினை விதிக்கக்கூடாது.

3. நுண்பாக நிதிக் கடன்களின் வரைவிலக்கணம்

3.1 நுண்பாக தொழில்முயற்சிகளை நிறுவுவதற்கும் முகாமைப்படுத்துவதற்குமான கடன்களை உள்ளடக்கிய ஆனால் தங்கத்திலான பொருட்கள் அரச பிணையங்கள் மற்றும் உரிமம் பெற்ற வங்கியொன்றில் அல்லது உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்றிலுள்ள தவணை வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அசையும் அல்லது அசையாத சொத்துக்களின் பிணைக்கெதிராக வழங்கப்பட்ட அனைத்துக் கடன்வழங்கல் வசதிகள் தவிர வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்காக/ குழு ரீதியான கடன்வழங்கல் முறைமையின் கீழான தனிப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள்.

4. விளக்கங்கள்

4.1 "நுண்பாக தொழில்முயற்சிகள்" என்பது தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள ரூ.15 மில்லியனுக்கும் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினையும் 10 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்ட தொழில்முயற்சியொன்று எனப் பொருள்படும் (மூலம்: கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் விடுக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு).

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

*நாணயச் சபையின் தலைவரும்*

*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்*